**கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு - 2023**

-------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் (''ஆணைக்குழு'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளின் தகவல்களை உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள சர்வதேச பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது.

ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**விடயத்தை வலியுறுத்துதல்**

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 2.3.3 மற்றும் 7.1 இன் மீது நான் கவனத்தை ஈர்க்கின்றேன. இது ஆணைக்குழு மீதான வருமான வரியின் பிரயோகம் மற்றும் ஆணைக்குழுவிற்கு சொந்தமாகவுள்ள காணிகளின் கிரயத்தினை அங்கீகரிக்காமை தொடர்பாக ஆணைக்குழுவின் நிலைமை தொடர்பில் கலந்துரையாடப்படுகிறது. இவ் விடயங்களில் எனது அபிப்பிராயம் மாற்றப்படவில்லை.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவானது புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் குறிப்புக்களின் பதிவுகள், கணக்குகள், காசு பாதுகாப்புபெட்டகை, பற்றுச்சீட்டுக்கள் மற்றும் ஏனைய பொருந்தக்கூடிய சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்கும் ஆவணங்கள் என்பனவற்றை பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும்,

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் ஆணைக்குழு இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 வரி ஒழுங்கு முறைகளுடன் இணங்காமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் விவகாரங்கள் மற்றும் அதன் நிதியின் மீது வருமான வரிப் பொறுப்பு எதுவும் எழாது என ஆணைக்குழு கருதியிருந்தும், ஆணைக்குழுவின் பல்வேறு மூலங்களில் இருந்து வருமானத்தைப் பெறுவதானால் வரி பொறுப்பு இருக்கலாம் என்று வரி ஆலோசகர் கருதுகிறார். எனவே, இது நடைமுறையில் உள்ள வரி விதிமுறைகளுக்கு இணங்காமைக்கு வழிவகுப்பதுடன் மேலதிக செலவு அபராதமாக செலுத்தவும் வேண்டியிருக்கும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்கு ஆணைக்குழு போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளபடி, முதலீட்டு வசதிப்படுத்தல் சேவைகளை வழங்குவது தொடர்பாக பெறப்பட்ட அல்லது பெறவேண்டிய அனைத்து பணத்தையும் சேகரிப்பதற்காக அரசாங்கத்தின் சார்பில் ஆணைக்குழு நிதியம் நிர்வகிக்கப்படுகிறது என்பதை ஆணைக்குழு உறுதிப்படுத்துகிறது. எவ்வாறாயினும், ஆணைக்குழு இந்த விடயத்தின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்கிறது, மேலும் கணக்காய்வுக் குழு இந்த கருத்தை மேலும் மதிப்பாய்வு செய்வதுடன் அதைனை தொடர்ந்தும் ஆனைக்குழுவின் கூட்டத்தில் பரிசீலனைக்கு வைக்கப்படும். | ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் வருமான வரிச் சட்டம் பொருந்தக்கூடிய தன்மை தொடர்பில் ஆணைக்குழு தெளிவான முடிவினைப் பெற்றுக் கொள்வதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறையை துரிதப்படுத்தவும் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,820,286 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 18,333,220 ஆகும். ஆகையால் நிதி விளைவில் ரூபா 20,153,506 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான நிர்வாகச் செலவுகள் ரூபா.105,603,102 ஆல் குறைவடைந்ததே அதிகரிப்பிற்கு காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் பின்வருமாறுள்ளது.

| வரிசை உருப்படி | 2023<br>ரூபா | 2022<br>ரூபா | வேறுபாடு<br>ரூபா | வேறுபாடு<br>% |
|---|---|---|---|---|
| வருமான வளங்கள் | 165,466,540 | 245,413,217 | -79,946,677 | -32.57 |
| நிர்வாக செலவினங்கள் | 156,691,316 | 262,294,418 | 105,603,102 | 40.26 |
| விளம்பர மற்றும் சந்தைப்படுத்தல் செலவினங்கள் | 267,797 | 1,250,637 | 982,840 | 78.58 |
| ஆண்டுக்கான மிகை/ (பற்றாக்குறை). | 1,820,286 | -18,333,220 | 20,153,506 | 109.92 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரமளிக்கப்பட்ட நபர்களிற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் பிரகாரம், இச்சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்ட நபர் தவிர்ந்த வேறு ஆளொருவர் கொழும்பு துறைமுக நகர அதிகார பிரதேசத்தில் வியாபாரத்தில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டாது. இந்த காலப் பகுதியில், ஆணையம் 85 உரிமங்களை வழங்கியுள்ளதுடன், 2 உரிமங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. தற்போது 83 அனுமதிப்பத்திரங்கள் செயற்பாட்டில் உள்ளதுடன் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 1,620,002,129 அமெரிக்க டொலர்களாகும். 2024 டிசம்பர் 5 இல் உள்ளவாறு, அங்கீகரிக்கப்பட்ட நபர்களின் ஐம்பத்து மூன்று (53) விண்ணப்பங்கள் அனுமதிக்காக இன்னும் நிலுவையில் உள்ளன. நிர்மாண கட்டத்தில், அரசாங்க வருமான பாய்ச்சலானது அனுமதிப்பத்திரங்களை பெறுவதன் ஊடாக முதலில் பெறப்படுகிறது. 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 6(எ) இன் பிரகாரம், ஆணைக்குழுவானது முதலீட்டாளர்களுக்கான ஒரே முகாமையைப்போல் செயல்பட்டு கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகார பகுதிக்குள்ளும் அதிலிருந்தும் மேற்கொள்ளப்படும் வணிகச் செயற்பாடுகளிற்கு தேவையான விரைந்த வசதியளிப்பு மற்றும் தேவையான பதிவுகள், உரிமங்கள், அங்கீகாரங்கள் மற்றும் ஏனைய அனுமதிகளை துரிதமாக வழங்குதல் என்பனவற்றினூடாக ஒற்றைச் சாளர முதலீட்டு எளிதாக்குபவராக இருத்தல் வேண்டும். குறித்த அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு ஆணைக்குழுவினால் போதிய நடவடிக்கைகள் எடுத்திருக்காமை அவதானிக்கப்பட்டது. | அனுமதிக்காக நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் மற்றும் தந்திரோபாய முக்கியத்துவம் வாய்ந்த பதவி 53 ஆகும். 2024 ஆகஸ்ட் முதல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிராததுடன் தந்திரோபாய முக்கியத்துவம் வாய்ந்த வணிகமாக அதிகாரமளிக்கப்பட்ட நபர்களின் பதவிக்கான வர்த்தமானி அறிவித்தல் எதுவும் வழங்கப்படவில்லை. இதற்கு முக்கிய காரணம் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு, அதைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றதும் ஆகும். 2024 டிசம்பர் 13 ஆம் திகதி புதிய ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் முதல் கூட்டம் 2025 ஜனவரி 15 இல் இடம்பெற்றது. இக் கூட்டத்தினை தொடர்ந்து ஒரு நடைமுறையில் உள்ள செயல்முறைகள் பற்றிய விரிவான ஆய்வு மற்றும் உடனான ஈடுபாடுகள் சம்பந்தப்பட்ட அமைச்சு முதலியன, அங்கீகரிக்கப்பட்ட நபர்களின் அனுமதிப்பத்திரங்களின் அனுமதி 2025 ஏப்ரல் மாதம் தொடங்கியது.<br>தற்போது அங்கீகரிக்கப்பட்ட நபர்களாக உரிமம் வழங்கப்பட்ட வணிகங்களுக்கு அடுத்த கட்டம் தேவைப்படுகிறது, அவர்கள் வணிகங்களாக நியமிக்கப்பட வேண்டும்.<br>வணிக தந்திரேபாய முக்கியத்துவமாக வடிவமைக்கப்பட வேண்டும். இந்த செயல்முறை நிதி அமைச்சினால் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம், விரைந்த வசதியளிப்பு மற்றும் தேவையான பதிவுகள், உரிமங்கள், அங்கீகாரங்கள் மற்றும் ஏனைய அனுமதிகளை துரிதமாக வழங்குதல் என்பனவற்றினூடாக ஊடாக ஆணைக்குழு இலகுவாக வியாபாரம் செய்வதை ஊக்குவிக்க வேண்டும். |

**3.2 2021 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட இலக்கத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுங்குவிதிகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் 71 ஆம் பிரிவின் பிரகாரம், ஜனாதிபதி அல்லது கொழும்பு துறைமுக நகரத்தின் விடயம் அமைச்சரொருவருக்கு குறித்தளிக்கப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய அமைச்சரானவர், ஆணைக்குழு மற்றும் ஏதேனும் தொடர்புடைய ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை என்பனவற்றின் கலந்தாலோசனையுடன் பரிந்துரைக்கப்பட வேண்டிய அனைத்து விடயங்கள் தொடர்பிலான ஒழுங்குவிதிகளை உருவாக்கலாம். இருப்பினும், பிரிவு 71 (ஆ) - உள்ளூர் சொத்து வரிகள், பிற வரிகள் மற்றும் (ஈ) – சூதாட்ட இடங்கள் மற்றும் சூதாட்ட நடவடிக்கைகள் தொடர்பான விதிமுறைகள் இன்னும் வெளியிடப்படவில்லை. | ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை அதிகாரம் கொண்ட சூதாட்ட ஒழுங்குமுறை ஆணையத்தை நிறுவும் பணியில் அரசாங்கம் தற்போது ஈடுபட்டுள்ளது என ஆணையகம் அறிவுறுத்தியுள்ளது. உத்தேச பரிசீலனையைத் தொடர்ந்து, சட்டம் மற்றும் குறித்த அதிகார சபையுடன் கலந்தாலோசித்து ஆணைக்குழு கொழும்பு துறைமுக நகரத்தினுள் சூதாட்டத்திற்கான பொருத்தமான ஒழுங்குவிதிகள் குறித்து பரிசீலிக்கும். விகிதங்கள் மற்றும் கட்டணங்கள் தற்போது திட்ட நிறுவனத்துடன் கலந்தாலோசித்து பரிசீலனையில் உள்ளன, மேலும் இறுதியாக்கப்பட்டவுடன் ஒப்புதலுக்காக ஆணையத்திற்கு சமர்ப்பிக்கப்படும். | கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலயத்தின் சீரான செயற்பாட்டிற்கு விசேட ஒழுங்குவிதிகள் முக்கியமானவை என்பதால், ஒழுங்குவிதிகளை வெளியிடும் செயன்முறையை ஆணைக்குழு துரிதப்படுத்த வேண்டும். |

**3.3 விளம்பர நடவடிக்கைகளை நடாத்துதல்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பு துறைமுக நகரத்தின் பிரதான திட்டத்தின் பிரகாரம், இலங்கை அரசாங்கத்திற்கு 62.1 ஹெக்டெயர் சந்தைக்குக் கிடைக்கக்கூடிய காணி பகுதி, நாட்டிற்கு பொருளாதார நன்மைகளை வழங்குவதற்காக சந்தைப்படுத்தப்பட வேண்டும். 116.2 ஹெக்டெயர் ஏனைய சந்தைப்படுத்தக்கூடிய காணிப்பகுதியை குத்தகைக்கு விடுவதற்கு நிர்மான | 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் நாட்டின் அரசியல் சூழல் மற்றும் பொருளாதார நிலைமை காரணமாக முதலீட்டாளர்களின் நம்பிக்கை எப்போதும் இல்லாத அளவுக்கு குறைவாகவே இருந்தது. | ஆணைக்குழு தனது சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு பிரச்சாரங்கள் மூலம் சாத்தியமான முதலீட்டாளர்களை ஈர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கம்பனிக்கு உரிமையுள்ளது. இருப்பினும் இந்த வருடத்தில் ஆணைக்குழு ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 267,797 இனை மாத்திரமே செலவிட்டுள்ளது. அரசாங்க வருவாய் முதன்மையாக வரி வருமானம் மற்றும் அகற்றல் வருமானம் என்பனவற்றிற்கு உகந்த நிலங்களை குத்தகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் விற்பனை வருமானமாக உள்ளது. இருப்பினும், சந்தைப்படுத்தக்கூடிய நிலங்களை குத்தகைக்கு விடுவதற்கான அவர்களின் சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு பிரச்சாரங்கள் மூலம் ஆணைக்குழுவால் வெற்றி கொள்ள முடியாமலிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நாடு கடனை செலுத்த முடியாமல் தவிக்கும் நிலையில் உள்ளதுடன் 2023 மார்ச்சிலேயே சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட நிதி வசதி அங்கீகரிக்கப்பட்டது. எனவே ஒரு விரிவான விளம்பர பிரச்சாரத்தைத் தொடங்குவது பொருத்தமானதாக கருதப்படவில்லை. தற்போதைய ஆணைக்குழு கொள்கை வழிகாட்டுதல்களைப் விளங்கிக்கொள்வதற்கும் தெளிவுபடுத்துவதற்கும் நிதி அமைச்சுடன் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து விளம்பர இயக்கம் தொடங்கப்படலாம். | |

### 3.4 பெருந்தோட்ட முகாமைத்துவ கம்பனியை நிறுவுதல் (EMC)

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை அரசாங்கம், இலங்கை நகர அபிவருத்தி அதிகாரசபை சார்பாக மெகா பொலிஸ் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும் சீன ஹார்பர் பொறியியலாளர் கம்பனியின் கொழும்பு துறைமுக தனியார் கம்பனி என்பனவற்றிற்கிடையிலான முத்தரப்பு ஒப்பந்தத்தின் பிரிவு 24அ.1 இன் பிரகாரம், ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து 36 மாதங்களுக்குள் பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் கூட்டிணைக்கப்பட வேண்டும். மேலும், சட்டத்தின் 59 ஆம் பிரிவின் பிரகாரம், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் பெருந்தோட்ட முகாமையாளராக பதவியிடப்பட்ட கம்பனியொன்று கூட்டிணைக்கப்படல் வேண்டும். ஆணைக்குழுவினால் இதுவரை பெருந்தோட்ட முகாமைத்துவ கம்பனியொன்றை நிறுவ முடியாமலிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2025 ஜனவரியில் நடவடிக்கைகளை ஆரம்பித்ததிலிருந்து, EMC பங்குதாரர் ஒப்பந்தமானது புதிதாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு உறுப்பினர்களின் ஆலோசனையுடன் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பரிசீலிக்கப்பட்டுள்ளது. இவ் ஒப்பந்தம், நிறுவன அமைப்பு அகவிதியுடன் சேர்த்து, அவர்களின் பரிசீலனைக்காக செயற்திட்ட கம்பனியுடன் பகிரப்பட்டுள்ளன. தேவையான கலந்துரையாடல்கள் நிறைவடைந்ததும், பின்னூட்டல்கள் பெறப்பட்ட பின்னர் EMC நிறுவப்படும். கொழும்பு துறைமுக நகரம் பொருளாதார ஆணைய சட்டத்தின் பாகம் XII-ல் | ஆணைக்குழு, முத்தரப்பு ஒப்பந்தத்தின் 24.அ.1 ஆம் பிரிவினை பின்பற்ற வேண்டும். |

| | | |
|---|---|---|
| | EMC யின் கடமைகள் மற்றும் செயல்பாடுகள் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேற்கொள்ள வேண்டிய அனைத்து கடமைகள் மற்றும் செயல்பாடுகளும் உரிய முறையில் நிறைவேற்றப்படும். | |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

**4.1 ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அங்கீபரிக்கப்பட்ட பதவியணி**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 6 (சீஏ) இன் பிரகாரம், ஆணைக்குழுவின் ஊழியர்களை நியமிக்கவும் பதவி நீக்கம் செய்யவும் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது. இருப்பினும், 2023 ஆம் ஆண்டிலுள்ளவாறு ஆட்சேர்ப்பு திட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆளனியினர் எதுவும் ஆணைக்குழுவிடம் காணப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | தற்போது, ஆணைக்குளுவிற்கு பதிவிநிலைத்தரம், சம்பள வரம்புகள் ஆகியவை உட்பட அங்கீகரிக்கப்பட்ட நிறுவன வடிவமைப்பும் ஒரு மனிதவளக் கொள்கை ஆவணமும் உள்ளது. வியாபாரம் வளர்ச்சியடைந்து ஆணைக்குழு விரிவடையும்போது, தற்போது உள்ள ஆவணங்களை மறுபரிசீலனை செய்து மேலதிக வழிகாட்டல்களை வழங்குவதற்காக மனிதவளத் துறையில் நிபுணர்களின் சேவைகளை ஆணைக்குழு நாடியுள்ளது. | ஆணைக்குழுவானது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஒன்றை உருவாக்க வேண்டும். |

**5. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**5.1 இடர் முகாமைத்துவ தொழிற்பாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அடிப்படையான சிறந்த நடைமுறைகளின் பிரகாரம், ஆணைக்குழுவிற்கு பொருந்தக்கூடிய நிறுவன ஆட்சி கட்டமைப்பைப் பற்றிய தெளிவான பார்வை இயக்குநர் சபைக்கு இருக்க வேண்டும். நிறுவன ஆட்சியின் ஒரு பகுதியாக, வாணிக இடர்களை நிர்வகிக்க ஆணைக்குழுவில் ஒரு இடர் முகாமைச் செயல்பாடு இருக்க வேண்டும். மேலும், ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட நடைமுறை வழிகாட்டி | குறிப்பிடப்பட்ட நடைமுறை வழிகாட்டி, ஆணைக்குழுவிற்குள்ளான நிதிச் செயல்பாடுகழுக்காகவே சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. இது செலுத்த வேண்டியவைகள், பெறவேண்டியவைகள், | நல்லாட்சியின் சிறந்த நடைமுறையாக, ஆணைக்குழு நிறுவனத்திற்குள் இடர் முகாமைத்துவ தொழிற்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். |

(பதிப்பு 2) இன்படி, முதலீட்டு இடர்களை நிர்வகிக்கும் ஒரு செயல்முறை சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த செயல்முறை, முதலீட்டில் உள்ள இடர்களின் மதிப்பீடு மற்றும் மேலாண்மையை உள்ளடக்கியிருக்க வேண்டும். ஆனால், ஆணைக்குழுவின் இடர் முகாமைத்துவ செயல்பாடுகள் அல்லது இடர் அலுவலர் இல்லாதது காணப்பட்டது.

சம்பளப்பட்டியல் மற்றும் பொதுப் பேரேடு ஆகியவற்றுக்கான நடைமுறைகளை விவரிக்கிறது.

ஆணைக்குழுவின் முக்கிய பணி, கொழும்பு துறைமுக நகரிலிருந்து இயங்க விரும்பும் வணிக நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குவதாகும். இவ்வகையான வணிகங்கள் காணி, கட்டடங்கள் போன்றவற்றில் முதலீடு செய்ய வேண்டிய தேவையிருக்கின்றது. இதில் மேற்கொள்ளப்படும் முதலீட்டு தீர்மானங்கள், குறித்த வணிகத்தை தொடங்க விரும்பும் முதலீட்டாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. ஆணைக்குழு, ஒரு முதலீட்டாளருக்கு உரிமம் வழங்கும் போது, அந்த விண்ணப்பத்தை 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டம் மற்றும் பொருந்தக்கூடிய விதிமுறைகளின்படி பரிசீலனை செய்யும். ஆணைக்குழு மேற்கொள்ளும் ஒரே முதலீடு நிலையான வைப்பிலே ஆகும். இவை அனைத்தும் ஐந்தொகையில் வெளிப்படுத்தப்படுகின்றன. இவை அனைத்தும் முன்னர் வகுக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் படியே செய்யப்படுகின்றன. ஆணைக்குழுவின் இடர் மேலாண்மை பொறுப்புகள், சிரேஸ்ட தலைமை நிதி, சட்ட மற்றும் ஒழுங்கு மீறல் தடுப்பு பொறுப்புகளில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதனைத் தவிர, கணக்கு கணக்காய்வுக் குழு, ஆணைக்குழுவின்

| | | |
|---|---|---|
| | வரையறுக்கப்பட்ட இடர்களுடன் கூடிய ஒரு வரையறுக்கப்பட்ட இடர் மேலாண்மை திட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தை முன்வைக்கும். இது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்கும்<br>• சுற்றுச் சூழல் இடர்<br>• சட்ட ரீதியான இடர்<br>• காசுப்பாய்ச்சல் இடர் மற்றும்<br>• ஒழுங்குமுறை இடர்<br>ஆணைக்குழு இவ்விடயம் தொடர்பான முன்னேற்றத்தை தொடர்ச்சியாக கலந்தாலோசித்துள்ளது, தொடர்ந்து கண்காணித்து முன்னேற்றத்தை உறுதி செய்யும். | |

**6. சுற்றுச்சூழல் விடயங்கள்**

**6.1 சுற்றுச்சூழல் பாதிப்பு முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 6(ஒ) இன் பிரகாரம், கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழுவின் அதிகாரப்பூர்வ பகுதிக்குள் தேவையானபடி சுற்றுச்சூழல் தரநிலைகள் மற்றும் திட்டங்களை உருவாக்கி, அவற்றை அங்கீகரித்து, சுற்றுச்சூழல் மேம்பாட்டுகளை திட்டமிடவும், கண்காணிக்கவும், செயல்படுத்தவும் ஆணைக்குழு பொறுப்பாக இருக்க வேண்டும். மேலும், 2023 டிசம்பர் 05 இல் நடைபெற்ற தேசிய வழிகாட்டி குழுக் கூட்ட எண் 6 இன் கூட்டக் குறிப்பின் படி, கழிவுநீர் முகாமைத்துவ முறைமைகள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. எனவே, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) ஒழுங்குகூறுகளின் செயல்படுத்தல் மற்றும் கொழும்பு துறைமுக நகர அதிகாரப்பூர்வ பகுதிக்கு நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தும் பிற சுற்றுச்சூழல் பிரச்சனைகள் தொடர்பான முன்னேற்றத்தைக் கண்காணிப்பது மிக முக்கியமானதாகும். | பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் தரநிலைகள் குறைந்தபட்சமாக பூரணமாக அமுல்படுத்தப்பட வேண்டுமென 2023 ஜூன் 02 ஆம் திகதியிடப்பட்ட 2334/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவாறான 2023 இன் 01 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகரத்தின் (அபிவிருத்தி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள்) பகுதி VI கூறுகின்றது. இதில் உள்ள நிலையான தன்மையுடைய குறிக்கோள்கள், முக்கிய செயல்திறன் காட்டிகள் மற்றும் இலக்குகள் அனைத்தும் கொழும்பு துறைமுக நகர வளர்ச்சி திட்டத்தின் முழுவதுக்கும் | 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் 6(ஒ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொழும்பு துறைமுக நகரத்தின் நிலையான அபிவிருத்திகளுடன் தொடர்புடைய அனைத்து சுற்றாடல் விடயங்களையும் ஆணைக்குழு கருத்தில் கொள்ள வேண்டும். |

பொருந்தும். இந்த பகுதி, நிலையான வடிவமைப்பு, ஆற்றல் திறன் மிக்க கட்டட வடிவமைப்பு, மழைவெளி நீர் சேகரிப்பு கொள்கை, நிலைபேன்தகு வடிவமைப்பு நீர் முகாமைத்துவம் மற்றும் இதனான பிற அம்சங்களை போன்றனவற்றை விவரிக்கிறது.